**அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள், சென்னை – 600 006.**

**முன்னிலை. முனைவர் மு.பழனிச்சாமி**

**அரசுத் தேர்வுகள் இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு)**

**ந.க.எண்.125746/பி1 /2019** **நாள். 04 .07.2020**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – மார்ச் / ஏப்ரல் 2020 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுகள் மற்றும் நடத்தப்படாமல் விடுபட்ட மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் – இரத்து செய்யப்பட்டது – பள்ளி மாணவர்களின் காலாண்டு மற்றும் அரையாண்டு தேர்வுகளின் விடைத்தாட்களை பள்ளிகளிலிருந்து பெறுதல் மற்றும் மதிப்பெண்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் – நீண்ட நாட்கள் பள்ளிக்கு வருகைப்புரியாத மாணவர்கள் (காலாண்டு மற்றும் அரையாண்டு தேர்வுகளுக்கு முழுமையாக வருகைப் புரியாத மாணவர்கள்) / மாற்றுச்சான்றிதழ் வழங்கப்பட்ட மாணவர்கள் / இயற்கை எய்திய மாணவர்கள் தொடர்பான அறிவுரை வழங்குதல் – சார்பு.

**பார்வை :**
1. அரசாணை (நிலை) எண்.54, பள்ளிக்கல்வி (அ.தே) துறை, நாள்.09.06.2020.
2. அரசுத்தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.009823/எப்1/2019 நாள்: 16.06.2020
3. அரசுத்தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.009823/எப்1/2019 நாள்: 18.06.2020
4. அரசுத்தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.125746/பி1/2019 நாள்: 27.06.2020
5. தஞ்சாவூர் முகாம் அலுவலரிடமிருந்து நீண்ட நாட்கள் பள்ளிக்கு வருகைப்புரியாத மாணவர்கள் / மாற்றுச்சான்றிதழ் பெற்ற மாணவர்கள் / இயற்கை எய்திய மாணவர்கள் – ஆகிய இனங்களில் தெளிவுரை கோரிப் பெறப்பட்ட கடிதம், நாள்: 04.07.2020

******

பார்வை 2 முதல் 4–வரையிலான செயல்முறைகள் வாயிலாக அரசுத் தேர்வுகள் இயக்ககத்திலிருந்து பள்ளி மாணவர்களின் காலாண்டு மற்றும் அரையாண்டு தேர்வுகளின் விடைத்தாட்களை முகாம் அலுவலர்களிடம் ஒப்படைக்கும் வழிமுறைகள் மற்றும் மதிப்பெண் பதிவேற்றம் , வருகைப் பதிவேடுகள், மாணவர்கள் பள்ளிக்கு வருகை புரிந்த நாட்கள் தொடர்பான விவரங்களை பதிவேற்றம் செய்தல் குறித்து தெளிவான அறிவுரைகள்தெரிவிக்கப்பட்டது.

மேற்காண் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஒவ்வொரு நாளும் முகாம் அலுவலர்களிடம் அரசுத்தேர்வுகள் இயக்ககத்தால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இதனடிப்படையில் ஒரு சில முகாம் அலுவலர்கள் பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாமாண்டு / மேல்நிலை முதலாமாண்டு (arrear) பெயர்ப் பட்டியலில் பெயர் உள்ள நிலையில் மாற்று சான்றிதழ் வழங்கப்பட்ட மாணவர்கள் / இயற்கை எய்திய மாணவர்கள் / காலாண்டு மற்றும் அரையாண்டு தேர்வுகளுக்கு முழுமையாக வருகைப் புரியாத மாணவர்களுக்கு பதிவு செய்வது குறித்து அறிவுரை கோரியுள்ளனர்.

**மேற்கண்டவாறு கோரப்பட்டவைகளுக்கு கீழ்கண்ட தெளிவுரைகள் வழங்கப்படுகிறது.**

1. மாற்று சான்றிதழ் வழங்கப்பட்ட மாணவர்கள் சார்ந்த பள்ளியின் தலைமையாசிரியரிடமிருந்து சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு மாற்றுச்சான்றிதழ் வழங்கப்பட்டுவிட்டது என்பதை எழுத்து மூலமாக கடிதம் பெற்று அதனடிப்படையில் முகாமில் பராமரிக்கப்படும் சம்பந்தப்பட்ட மாணவரின் முகப்புத்தாளில் மதிப்பெண் சரிப்பார்க்கும் அலுவலர் **(M.V.O)**, கூர்ந்தாய்வு அலுவலர் **(S.O)** மற்றும் அட்டவணையாளர் **(Tabulator)** ஆகியோர் மாற்றுச்சான்றிதழ் வழங்கப்பட்டுவிட்டது என்பதை பதிவு செய்து கையொப்பம் இட வேண்டும். இதனடிப்படையில் **Data Entry Opertaor** அம்மாணவர்களுக்கு **“D"** என்று பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

2. இயற்கை எய்திய மாணவர்கள் சார்ந்த பள்ளியின் தலைமையாசிரியரிடமிருந்து சம்பந்தப்பட்ட மாணவர் இயற்கை எய்தி விட்டார் என்று என்பதை எழுத்து மூலமாக கடிதம் பெற்று அதனடிப்படையில் முகாமில் பராமரிக்கப்படும் சம்பந்தப்பட்ட மாணவரின் முகப்புத்தாளில் மதிப்பெண் சரிப்பார்க்கும் அலுவலர் **(M.V.O)**, கூர்ந்தாய்வு அலுவலர் **(S.O)** மற்றும் அட்டவணையாளர் **(Tabulator)** ஆகியோர் மாணவர் இயற்கை எய்தி விட்டார் என்பதை பதிவு செய்து கையொப்பம் இட வேண்டும். இதனடிப்படையில் **Data Entry Opertaor** அம்மாணவர்களுக்கு **“D"** என்று பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

3. காலாண்டு மற்றும் அரையாண்டு தேர்வுகளுக்கு முழுமையாக வருகைப் புரியாத மாணவர்கள் சார்ந்த பள்ளியின் தலைமையாசிரியரிடமிருந்து சம்பந்தப்பட்ட மாணவர்கள் காலாண்டு மற்றும் அரையாண்டு தேர்வுகளுக்கு முழுமையாக வருகைப் புரியவில்லை என்பதை எழுத்து மூலமாக கடிதம் பெற்று அதனடிப்படையில் முகாமில் பராமரிக்கப்படும் சம்பந்தப்பட்ட மாணவரின் முகப்புத்தாளில் மதிப்பெண் சரிப்பார்க்கும் அலுவலர் **(M.V.O)**, கூர்ந்தாய்வு அலுவலர் **(S.O)** மற்றும் அட்டவணையாளர் **(Tabulator)**

ஆகியோர் மாணவர் காலாண்டு மற்றும் அரையாண்டு தேர்வுகளுக்கு முழுமையாக வருகைப் புரியவில்லை என்பதை பதிவு செய்து கையொப்பம் இட வேண்டும். இதனடிப்படையில் **Data Entry Opertaor** அம்மாணவர்களுக்கு ‘‘**A**" என்று பதிவேற்றம் செய்தல் வேண்டும்..

ஒவ்வொரு முகாம் அலுவலர்களும் தங்கள் கல்வி மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உயர்நிலைப்பள்ளி / மேல்நிலைப்பள்ளி வாரியாக மாணவர்களின் எண்ணிக்கையின்படி (பெயர் பட்டியலில் உள்ளபடி) ஒவ்வொரு மாணவர்களின் பாடவாரியாக பெறப்பட்ட விடைத்தாளில் உள்ள மதிப்பெண்களை பதிவேற்றம் செய்யவேண்டும்.

அவ்வாறு பதிவேற்றம் செய்யப்பட்ட மதிப்பெண்களின் எண்ணிக்கையை பள்ளி வாரியாக ஒத்திசைவு செய்து இம்முகாம் பணி நிறைவடையும் போது இத்துடன் இணைக்கப்படும் படிவத்தினை பூர்த்தி செய்து அறிக்கையாக அரசுத்தேர்வுகள் இயக்ககத்திற்கு அனுப்பிடவேண்டும்.

இப்பணி முக்கியத்துவம் வாய்ந்த பணி என்பதால் முகாம் அலுவலர்கள் இப்பணியில் தனிக்கவனம் செலுத்த அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு: படிவம்

ஓம்/–
அரசுத் தேர்வுகள் இயக்குநர் (மு.கூ.பொ)

பெறுநர்

1. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் / முகாம்அலுவலர்கள்
2. இணை இயக்குநர் கல்வி பாண்டிச்சேரி

நகல்

1. அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித்துறை, சென்னை –9
–தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை–6
– தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்.
4. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.